# சணல்

சணலை சாகுபடி செய்ய தகுந்த மாவட்டங்கள் கோயம்புத்தூர், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களாகும். மேலும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, பெரம்பளூர், கரூர், பதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சில பகுதிகளில் எங்கெல்லாம் நிச்சயமான நீர் நிலைகள் உள்ளனவோ, அங்கு சணல் சாகுபடி செய்யலாம்.

**மண்வகைகள்**

மணல் கலந்த வண்டல், களிமண் சார்ந்த இடைப்பட்ட மண்வகைகள் சணல் சாகுபடி செய்ய ஏற்றவையாகும். கேப்சுலாரி ஸ் சணல் வகை நீர் தேங்கும் நன்செய் நிலங்களிலும் வளரக்கூடியது, ஆனால் ஒலிட்டோரியஸ் சணல் வகை நீர்தேங்கும் பகுதிகளில் வளரக்கூடியவை அல்ல, அதனால் அவை மணல் சார்ந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்றன.

**பருவம்** மாசி - வைகாசி (பிப்ரவரி)

**நிலம் பண்படுத்தல்** சணலின் விதைகள் மிகவும் சிறியவை என்பதால், நிலம் நன்கு பண்படுத்தப்பட்டு மாவு போன்ற நிலைக் குத் தயார் செய் யவும் .

**இயற்கை மற்றும் செயற்கை உரமிடல்**

ஐந்து டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது இட வேண்டும். எக்டருக்கு 20 கி தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். நீர் நிலைக்கு ஏற்ப பாத்தி அமைக்கப்பட வேண்டும்.

**இரகங்கள்** :- கேப்சுலாரிஸ் சணல் - ஜே.ஆர்.சி 212, 321, 7447, ஒலிட்டோரியஸ் சணல் - ஜே.ஆர்.ஓ 524, 878, 7835

**வயது** - 120 - 140 நாட்கள்

**விதையளவும் விதைப்பும்** - விதைகளை தெளித்தல் அல்லது வரிசையில் விதைக்கலாம்

| சணல் வகை | விதையளவு (கி / எ) | | இடைவெளி (செ.ம) | ஒரு சதுர மீட்டருக்கு இருக்க வேண்டிய செடி எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | வரிசை விதைப்பு | தெளிப்பு | | |
| ஒலிட்டோரியஸ் | 5 | 7 | 25 x 5 | 80 |
| கேப்சுலாரிஸ் | 7 | 10 | 30 x 5 | 67 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எஸ்விபிஆர் 2 | டி.எஸ்.டி.22 x ஜே.ஆர் 36 ஒட்டிலிருந்து தேர்வு | மாசி, புரட்டாசி | கோடைகால இறவை – குளிர்கால மானாவாரி | 2000 | 150-160 நாட்கள் அரவைத் திறன் 36.4 சதம், நடுத்தர இழை நீளம் |
| எஸ்விபிஆர் 3 | எல்..எச்.900 x 1301 டிடி ஒட்டிலிருந்து தேர்வு | தை | நெல் தரிசு | 1800 | 135-140 நாட்கள் அரவைத் திறன் 35.2 சதம் |
| கே.சி 2 | எம்.சி.யு 10 x கே.சி 1 ஒட்டிலிருந்து தேர்வு | புரட்டாசி | மானாவாரி | 1000 | 135-140 நாட்கள் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை. 40ம் நெம்பர் நூல் நூற்கும் திறன். தத்துப்பூச்சியின் தாக்குதலை எதிர்த்து வளரும் தன்மை. |